/மின்னஞ்சலில்/

பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

சுற்றறிக்கை

எண்.45958/ஐ3/2017 நாள் 19.01.2018

அய்யா,

பொருள்: சங்கம் - சங்கக் கோர்வைகளை தாக்கல் செய்யத் தவறிய சங்கங்கள் மீதான நடவடிக்கை – அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

*****

தமிழ்நாடு சங்கப்பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களில், பல சங்கங்கள் ஆண்டறிக்கைகளை முறையாகக் கோர்வைக்கு தாக்கல் செய்வதில்லை என்றும், இதன் காரணமாக ரூ.5 கோடிக்கு மேல் அரசுக்கு செலுத்த வேண்டிய சந்தா தொகையை செலுத்தாமல் நிலுவை வைத்துள்ளதாகவும் அவ்வாறு நிலுவை வைத்துள்ள சங்கங்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் புகார் மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலுள்ள அனைத்துப் பதிவு மாவட்டங்களிலும் மேற்குறிப்பிட்டுள்ள சூழல் நிலவ வாய்ப்பிருக்கலாம் எனக் கருதப்படுவதால், மாவட்டப்பதிவாளர்கள் தங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் சார்பாக ஆண்டறிக்கைகள் முறையாகக் கோர்வைக்கு தாக்கல் செய்யப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணித்திட அறிவுறுத்தப்படுகிறது.

சங்கங்கள் தனது ஆண்டறிக்கைகளை தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மேலாக கோர்வை செய்யத்தவறினால் தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம் 1975, பிரிவு 44(3)ன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் பிரிவு 16(3)(b)ன் கீழ் கோர்வைக்கு தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை மட்டிலும் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு தாக்கல் செய்யாத சங்கங்களின் மீது, பிரிவு 44(3)(b)ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்டப்பதிவாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Verified @ RealEstate ™

இந்நடவடிக்கையானது, தங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்களைப் பதிவு நாளின் அடிப்படையில் காலவாரிசைப்படுத்தி, முதுநிலையின் அடிப்படையிலும் பதிவு எண் வரிசையின் அடிப்படையிலும் எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு சங்கப்பதிவுச் சட்டப்பிரிவு 44(3)ன் கீழ் காலதாமதமின்றி உடன் அறிவிப்பு அனுப்பிடவும் அறிவிப்பு காலம் முடிவடைந்த உடன் பிரிவு 44(3)க்கு பதிலளிக்காத சங்கங்களின் பெயரினை பதிவு நீக்கம் செய்திட பிரிவு 44(4)ன் கீழ் அறிவிப்பு தாமதமின்றி வெளியிடவும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது. இந்நடவடிக்கை காலமுறையாக தவறாது மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இந்நடவடிக்கை தொடர்பாக தனிக்கவனம் செலுத்தி துரித நடவடிக்கை எடுத்து அதன் விபரத்தை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நடவடிக்கைகளை சீராய்வுக் கூட்டத்திற்போது ஆய்வு செய்திட துணை பதிவுத்துறைத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பதிவுத்துறைத்தலைவர் சீராய்வுக் கூட்டத்தில் இது குறித்து ஆய்வு செய்யப்படும்.

/ஆணையின்படி/

பதிவுத்துறைத்தலைவருக்காக

பெறுநர்:

அனைத்து (நிர்வாகம்) மாவட்டப்பதிவாளர்கள்.

நகல்:

1.அனைத்து துணை பதிவுத்துறைத்தலைவர்கள்.

2.கணினிப்பிரிவு

Verified RealEstate ™